முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் III பரீட்சை – 2021 யூலை

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2021-10-23
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்**):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் நோக்கமானது தகவல்களைப் பயன்படுத்த விரும்புவோருக்கு உறுதிப்பாட்டை வழங்குவதாகும். நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் (reasonable assurance engagement) மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் (limited assurance engagement) என இரண்டு வகையான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்கள் காணப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஆகியவற்றுக்கிடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) சட்டநியதிக் கணக்காய்வு தவிர்ந்த உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

முகவராண்மைக் (agency) கோட்பாடானது சபைத் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) ஆகியோரின் வகிபாகங்களின் பொறுப்புக்களைப் பிரிப்பதன் மூலம் பங்குதாரர் நாட்டங்களுக்கு பாதுகாப்பு தேவை என வாதிடுவதுடன், செயன்முகமைக் (stewardship) கோட்பாடானது இந்த வகிபாகங்களின் பொறுப்புக்களைப் பங்கிடுவதன் மூலம் பங்குதாரர் நாட்டங்கள் உச்சப்படுத்தப்படுகின்றன என வாதிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

செயன்முகமைக் கோட்பாடு மற்றும் முகவராண்மைக் கோட்பாடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**AB PLC** என்பது பொழுதுபோக்குத் துறையில் செயல்படுகின்ற ஒரு கம்பனி ஆகும். கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, கம்பனி அதனது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்கொள்கிறது. கம்பனியால் பின்பற்றப்படுகின்ற இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகத்தினால் ஏற்பிசைவு செய்யப்பட்ட இடர்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| பிரதான இடர்கள் | இடர் வீதம் |
|---|---|
| பேரினப் பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழல் | அதிகம் |
| ஒழுங்குபடுத்தல் சூழல் | அதிகம் |
| தகவல் தொழில்நுட்பம் | அதிகம் |
| போட்டி | குறைவு |
| மனித வள முகாமைத்துவம் | குறைவு |
| சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரமும் பாதுகாப்பும் | அதிகம் |
| நற்பெயர் மற்றும் வர்த்தக நாமம் | குறைவு |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பொழுதுபோக்குத் துறையில் இயங்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில் **AB PLC** இன் கீழ்வரும் இடர் பகுதிகளை **மதிப்பிடுக:**

(a) செயற்பாட்டு இடர் (Risk in Operations)

(b) இணக்க இடர் (Compliance Risk) (05 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனமொன்று அதன் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஊடாக ஈடுபடுத்தல் செயற்பாட்டுத் தரத்தின் நிலைப்புத் தன்மையை (consistency) ஊக்குவிக்கிறது. அத்துடன் தனித்தனியான ஈடுபடுத்தல்களின் தரக் கட்டுப்பாட்டிற்கு ஈடுபடுத்தல் பங்காளர் இறுதிப் பொறுப்பு வகிப்பவராக இருக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஈடுபடுத்தல் செயற்பாட்டுத் தரத்தின் நிலைப்புத்தன்மையைப் பேணுவதில் கவனிக்கப்பட வேண்டிய இரண்டு (02) விடயங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) கணக்காய்வுப் பணியை மீளாய்வு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**சுராஜ்** மற்றும் **அனில்** ஆகிய இரு பங்காளர்களுடன் இயங்கும் பட்டயக் கணக்காளர் நிறுவனமான **சுராஜ் அன்ட் கம்பனியின்** சிரேஷ்ட கணக்காய்வாளராக நீங்கள் பணியாற்றுகின்றீர்கள். உங்களுடைய நிறுவனம் கடந்த 25 ஆண்டுகளாக **வரையறுக்கப்பட்ட பென் டிரேடிங் (தனியார்) கம்பனியின் (FTL)** கணக்காய்வாளராக இருப்பதுடன் கடந்த 6 ஆண்டுகளாக இந்தக் கம்பனியின் கணக்காய்வில் நீங்கள் ஈடுபடுகின்றீர்கள். **FTL** நிறுவனத்தில் கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அதன் முகாமைப் பணிப்பாளர் நிறுவனத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடும் முகமாக கணக்காய்வு அணியிலிருந்த அனைவருக்கும் 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் 2 நாட்கள் தங்குவதற்குவதற்கான ஏற்பாடுகளையும் பரிசு வவுச்சர்களையும் அன்பளிப்புச் செய்திருந்தார்.

வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது, மூலதனத் தளத்தை மேம்படுத்துவதற்காக அடுத்த வருடத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தனியார் பணியமர்த்தல் (private placement) பற்றி **FTL** இன் முகாமைப் பணிப்பாளர் தெரிவித்திருந்ததுடன் ஒரு பொருத்தமான முதலீட்டாளரைக் கண்டறிய உங்களது முகாமையாளரும் இணக்கம் தெரிவித்திருந்தார். **சுராஜ் அன்ட் கம்பனி** சாத்தியமான ஒரு முதலீட்டாளரைக் கண்டறிவதில் வெற்றி பெறுமாயின், தாங்கள் கணக்காய்வுக் கட்டணத்தை 20% இனால் அதிகரிப்பதாக முகாமைப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி விவரணத்தில், அடிப்படை நெறிமுறைக் கோட்பாடுகளுடன் இணங்குவதற்கான மூன்று (03) அச்சுறுத்தல்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு **சுராஜ் அன்ட் கம்பனியால்** நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நான்கு (04) நிறுவன ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

ஒரு புதிய கணக்காய்வுச் சேவை நாடுநரான (client) **வரையறுக்கப்பட்ட ரோய் ஹோட்டல்ஸ் (தனியார்) கம்பனிக்கு (RHL)** முதல் முறையாக **விமல்** என்பவர் கணக்காய்வு முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கணக்காய்வுப் பங்காளரான **சிவா,** இதுவரை எதுவும் செய்யப்படவில்லை எனவும் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **RHL** இன் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். விசேடமாக தொடக்கநிலைக் கணக்காய்வு சம்பந்தமான விடயங்களில் ஆரம்பகட்ட ஈடுபடுத்தல் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு **சிவா** கோரியுள்ளார். மேலும், கூட்டாளிகள் (அணி அங்கத்தவர்கள்) இருவரால் நிறைவு செய்யப்பட்ட கணக்காய்வு மென்பொருள் மற்றும் பணித் தாள்களில் உள்ளடக்கப்பட வேண்டிய கணக்காய்வு ஆவணப்படுத்தலானது மீளாய்வு செய்யப்பட வேண்டுமென **சிவா** தெரிவித்துள்ளார். **விமல்,** கணக்காய்வு ஆவணப்படுத்தல் தொடர்பில் கூட்டாளிகள் இருவருடனும் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்காய்வை ஆரம்பிக்க முன்னர், மேற்படி தொடக்கநிலைக் கணக்காய்வு தொடர்பில் **விமலால்** ஆற்றப்பட வேண்டிய இரண்டு (02) குறிப்பான (specific) நடைமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கணக்காய்வு ஆவணப்படுத்தலின் முதன்மையான நோக்கத்தை (Primary purpose) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) கணக்காய்வு ஆவணப்படுத்தலின் பணித் தாள்களில் (working papers) உள்ளடக்கப்படும் மூன்று (03) தகவல்களை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனமான **சேனா அன்ட் கம்பனி** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ராமா (தனியார்) கம்பனியின்** கணக்காய்வாளர் ஆகும். வரிக்கு முந்திய இலாபத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட கணக்காய்வுக்கான பொருண்மை (materiality) ரூபா 900,000/- ஆகும்.

கீழ்வரும் தகவல்கள் கணக்காய்வு ஆவணப்படுத்தலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

**கண்டறிதல்கள் :**

(1) கம்பனி, குறித்த வங்கிக் கடன் ஒன்றைப் பெற்றுக் கொண்டதன் மூலம் ஆண்டின் காலப்பகுதியில் அலுவலகக் கட்டடம் ஒன்றை நிருமாணித்துள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் கடன் மீது ஏற்பட்ட வட்டியின் மொத்தத் தொகை ரூபா 5 மில்லியனாக இருந்ததுடன், இது முற்றடக்க வருமானக் கூற்றில் நிதிச் செலவினமாகப் பதிவு செய்யப்பட்டது. கட்டடத்தின் நிருமாணம் 2021 டிசெம்பரில் பூர்த்தியடையும் என்பதுடன் இந்த நிருமாணம் தொடர்பில் ஆண்டின்போது செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 65 மில்லியன் ஆகும்.

(2) 2020 செப்ரெம்பர் தொடக்கம் 2021 பெப்ரவரி வரையுள்ள மாதங்களுக்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் கணக்காளரால் மீளாய்வு செய்யப்படவில்லை.

(3) ஆண்டின் காலப்பகுதியில், HR அலுவலரால் தயாரிக்கப்பட்ட மாதாந்த சம்பளப்பட்டியல் பொழிப்பானது HR முகாமையாளரால் மீளாய்வு செய்யப்படவில்லை.

(4) மேலே இலக்கம் (2) இல் கூறப்பட்ட விடயம் முன்னைய ஆண்டின் கணக்காய்வுக் கண்டறிதல் களிலும் அறிக்கையிடப்பட்டிருந்த ஒரு கண்டறிதலாக இருந்தது.

**தொடர்பாடல் :**

கணக்காய்வு முகாமையாளர் இந்தக் கண்டறிதல்கள் தொடர்பாக **வரையறுக்கப்பட்ட ராமா (தனியார்) கம்பனியின்** உதவிக் கணக்காளருடன் கலந்துரையாடியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி விவரணத்தில் தரப்பட்ட தகவல்களின்படி, கணக்காய்வாளர் முகாமையுடனும் ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருடனும் தொடர்பாட (communicate) வேண்டிய இரண்டு (02) விடயங்களை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்படும் கணக்காய்வு அபிப்பிராயத்தின் மீது, மேலே கண்டறிதல்கள் தலைப்பின் கீழ் உள்ள இல. (1) இல் உள்ளடக்கப்பட்ட விடயத்தின் தாக்கத்தை **மதிப்பிடுக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட மலாகா (தனியார்) கம்பனி** என்பது 200 தொழிற்சாலை ஊழியர்களுடன் ஐரோப்பிய சந்தைக்கான ஆடைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஒரு குடும்ப வணிகம் ஆகும். கம்பனியின் சம்பளப் பட்டியல் தொடர்பான செயன்முறை ஆய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்துகிறது :

(1) HR கிளையானது HR முகாமையாளரையும் HR உதவியாளரையும் கொண்டிருப்பதுடன் நிதிக் கிளையானது கணக்காளர் ஒருவரையும் கணக்கு அலுவலர் ஒருவரையும் கொண்டிருக்கிறது.

(2) ஊழியர்களின் வரவு, நுழைவாயிலில் பேணப்படுகின்ற கைமுறையான பதிவேடு ஒன்றில் பதியப்படுகிறது.

(3) மாதாந்தச் சம்பளப்பட்டியல், கைமுறையாகப் பதிவு செய்யப்பட்ட வரவுப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு HR உதவியாளரால் தயாரிக்கப்படுகிறது.

(4) சம்பளப்பட்டியல் தொடர்பான சகல திருத்தங்களும் HR உதவியாளரால் செய்யப்படுகின்றன.

(5) கொடுப்பனவுகள், ஊழியர்களின் உரிய வங்கிக் கணக்குகளுக்கு செலுத்தப்படுவதுடன் சம்பளத்தை மாற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் கணக்கு அலுவலரால் தயாரிக்கப்பட்டு, பணிப்பாளரால் அங்கீகரிக்கப்படுகின்றன.

(6) சம்பளப்பட்டியல் பதிவுகள் நிதிக் கிளையின் பொதுவான பகுதியொன்றில் வைத்துப் பேணப்படு கின்றன.

(7) தொழிற்சாலையில் 5 உற்பத்தி வரிசைகள் காணப்படுவதுடன், ஒவ்வொரு வரிசையும் தொழிற்சாலையினுள் உள்நுழைதல், தொழிற்சாலையிலிருந்து வெளியேறுதல் மற்றும் ஒவ்வொரு ஊழியராலும் உற்பத்தி செய்யப்படும் வெளியீடு போன்ற தொழிற்சாலையின் வேலை அட்டவணையைப் பேணுகின்ற தொழிற்சாலை மேற்பார்வையாளரால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

(8) பணிப்பாளர், சம்பளப்பட்டியல் பொழிப்பிலுள்ள நபர்களின் எண்ணிக்கையை (headcount) வேலை அட்டவணையுடன் மீளாய்வு செய்கிறார்.

(9) சம்பளப்பட்டியல் தொடர்பான கணக்கீட்டுப் பதிவுகள் கணக்கு அலுவலரால் பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன.

(10) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி அதன் பொதுப் பேரேட்டுத் (GL) தொகுதிக்கு மாற்றங்களை செய்திருந்ததுடன், இந்த மாற்றங்களை கணக்கு அலுவலர் மேற்கொண்டிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட மலாகா (தனியார்) கம்பனியால்** சரியாக வடிவமைக்கப்படாத கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலகங்கள் (elements) மூன்றினை (03), ஒவ்வொரு உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களுக்குமான உதாரணங்களுடன் **ஏற்பிசைவு செய்க.** (06 புள்ளிகள்)

(b) மேற்படி சம்பளப்பட்டியல் செயன்முறைப் பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான மூன்று (03) பரிந்துரைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்றினுள் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூன்று (03) நன்மைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(d) சம்பளப்பட்டியல் முறைமையிலுள்ள சம்பளப்பட்டியல் செயன்முறையின் படிமுறைகளைக் (steps) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(e) நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அதிகாரமளிக்கப்படாத மாற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது தடுப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய நான்கு (04) கட்டுப்பாடுகளையும் தரவுக் கோப்புக்கான அதிகாரமளிக்கப்படாத திருத்தங்களைத் தடுப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய இரண்டு (02) கட்டுப்பாடுகளையும் **பட்டியலிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

பட்டயக் கணக்காளர் நிறுவனமான **DSK அஸோசியேற்றின்** சிரேஷ்ட கணக்காய்வு அலுவலர் நீங்களாவீர்கள். கோவிட் 19 இன் தாக்கம் காரணமாக, கணக்காய்வுகளை ஆற்றுவதற்கான பயணக்களைக் குறைத்துக் கொண்டு, நிகழ்நிலைச் (Online) செயற்பாடுகளைப் பயன்படுத்துமாறு உங்களுடைய கணக்காய்வு முகாமையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

தைக்கப்பட்ட ஆடைகளைக் கொள்வனவு செய்து, மொத்த விற்பனையில் ஈடுபடும் **வரையறுக்கப்பட்ட SM ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து** ஒரு மின்னஞ்சல் உங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. கீழ்வரும் நிதி நிலைக் கூற்றுக்களும் அட்டவணைகளும் அந்த மின்னஞ்சலில் இணைக்கப்பட்டிருந்தன :

(1) நிதி நிலைக் கூற்றுக்கள்: *(ரூபா ’000)*

| | 2021 மார்ச் 31 இல் | 2020 மார்ச் 31 இல் |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 231,831 | 125,550 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 84,340 | 20,660 |
| வியாபார வருமதிகள் | 102,571 | 60,390 |
| | **418,742** | **206,600** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 80,000 | 80,000 |
| கைக்கொள் இலாபம் | 39,410 | 24,210 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன்கள் | 141,390 | 55,410 |
| வியாபார சென்மதிகள் | 121,390 | 45,930 |
| ஏனைய சென்மதிகள் | 36,552 | 1,050 |
| | **418,742** | **206,600** |

(2) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் : *(ரூபா ’000)*

| | கிரயம் | சேர்ப்பனவுகள்/ (அகற்றல்கள்) | 2021 மார்ச் 31 இல் திரண்ட தேய்மானம் | 2021 மார்ச் 31 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 152,576 | 89,300 | 24,200 | 217,676 |
| மோட்டார் வாகனங்கள் | 18,980 | - | 4,825 | 14,155 |
| **மொத்தம்** | **171,556** | **89,300** | **29,025** | **231,831** |

(3) வியாபார வருமதிகளின் காலப் பகுப்பாய்வு: *(ரூபா ’000)*

| பெயர் | மொத்தம் | 0-30 நாள்கள் | 30-60 நாள்கள் | 60-90 நாள்கள் | 90 நாள்களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|
| தனுஷ்க பெஷன்ஸ் | 26,831 | 2,855 | - | - | 23,976 |
| சிரான் பெஷன்ஸ் | 41,325 | 14,610 | 14,550 | 12,165 | - |
| காமில் டெக்ஸ்டைல்ஸ் | 7,580 | 7,580 | - | - | - |
| SJ கார்மென்ட்ஸ் | 4,011 | - | 4,011 | - | - |
| லக்ஷ்மி கார்மென்ட்ஸ் | 21,357 | 6,822 | (955) | 12,153 | 3,337 |
| சினேஜி டெக்ஸ் | 1,467 | - | - | - | 1,467 |
| | **102,571** | **31,867** | **17,606** | **24,318** | **28,780** |

(4) வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புகள் : *(ரூபா ’000)*

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | 2021 | 2020 |
|---|---|---|
| விற்பனைகள் | 175,300 | 164,210 |
| விற்பனைக் கிரயம் | (147,290) | (131,350) |
| **மொத்த இலாபம்** | **28,010** | **32,860** |
| செலவினங்கள் | (12,810) | (11,700) |
| **வரிக்கு முந்திய நிகர இலாபம்** | **15,200** | **21,160** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) **லக்ஷ்மி கார்மென்ட்ஸ்** என்பது **வரையறுக்கப்பட்ட SM ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின்** உறவுமுறைத் தரப்பு உரிமம் (நிறுவனம்) ஒன்றென கடந்த வருட பணித் தாள்கள் (working papers) சுட்டிக் காட்டுகின்றன. இது **வரையறுக்கப்பட்ட SM ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின்** முகாமைப் பணிப்பாளரது மனைவியான **திருமதி குலரத்னவுக்குச்** சொந்தமானதாகும்.

(2) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் **வரையறுக்கப்பட்ட SM ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின்** கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. இதனால் புள்ளிவிபரமற்ற மாதிரியுடன் (non-statistical sample) அணுகுமாறு ஈடுபடுத்தல் பங்காளர் உங்களை அறிவுறுத்தி யுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி அறிக்கைகளிலிருந்து மேலும் கணக்காய்வுச் சான்றுகளை விசாரிப்பதற்கும் சேகரிப்பதற்கும் உங்களுக்குத் தேவையான ஐந்து (05) பகுதிகளை (areas) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய கணக்காய்வு விசாரணைகள் தவிர்ந்த ஏனைய கணக்காய்வு நடைமுறைகளின் மூன்று (03) வகைகளை, ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத்துடன் **குறிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட SM ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின்** ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கணக்காய்வில் ஆற்றப்பட வேண்டிய ஐந்து (05) கணக்காய்வு நடைமுறைகளைப் **பட்டியலிடுக.** (05 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட SM ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியின்** உறவுமுறைத் தரப்பினரது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நீங்கள் ஆற்ற வேண்டிய ஐந்து (05) கணக்காய்வு நடைமுறைகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(e) விடயப் பந்தியில் வலியுறுத்தல் ஒன்றை உள்ளடக்குவது அவசியமானது எனக் கணக்காய்வாளர் கருதக்கூடிய சூழ்நிலைகளுக்கான (circumstances) இரண்டு (02) உதாரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |